<u>இராசிபுரம் நகராட்சி</u>

<u>நகர்மன்ற அவசரக் கூட்ட அறிவிப்பு</u>

2024–ஆம் வருடம் அக்டோபர் மாதம் 23–ஆம் தேதி புதன் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் இராசிபுரம் நகராட்சியின் அவசரக் கூட்டம் ஒன்று நகர் மன்ற கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

அது சமயம் கீழ்க்கண்டப் பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இராசிபுரம் நகராட்சி
நாள் 21.10.2024

தலைவர்,
நகர் மன்றம்

## பொருள்கள்

(1) இராசிபுரம் நகராட்சி வார்டு 1எண். 17–இல் வரதன் தெரு மற்றும் வார்டு எண். 27–இல் தட்டான் குட்டை கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் ஆகிய இடங்களில் உள்ள மழைநீர் வடிகாலின் பக்க சுவர்கள் 70 மீ. நீளத்திற்கு சேதமடைந்துள்ளது. அதனை சரிசெய்ய வேண்டியது அவசியமாகிறது. எனவே புதிய மழைநீர் வடிகால் அமைத்து வாகனங்கள் செல்ல ஏதுவாக இரண்டு சிறுபாலம் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 7,20,000/–ற்கு பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் அங்கீகரிக்கலாம்.
ஆ)மேற்கண்ட செலவினத் தொகை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(2724/24/இ1)

**தீர்மானம் எண். 637**

அங்கீகரிக்கப்பட்டது.

(2)

பார்வை :

1. நகராட்சி நிருவாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 686/2021/DO1 நாள் 22.11.2021
2. நகராட்சி நிருவாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 686/2021/DO1 நாள் 25.01.2021
3. திரு இரா. பிரகாசம், நகராட்சி ஒப்பந்ததாரர் அவர்களின் கடித நாள் 07.10.2024
4. திரு இரா. பெரியசாமி, நகராட்சி ஒப்பந்ததாரர் அவர்களின் கடித நாள் 19.07.2024.

---

பார்வை 1 மற்றும் 2–இல் காணும் நகராட்சி நிருவாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணையில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2021- 22 மற்றும் தமிழ்நாடு நிலையான நகர்புற வளர்ச்சி 2020- 21 திட்டங்களின் கீழ் இராசிபுரம் நகரத்திற்கு சாலை பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்டப் பணிகளுக்கு 12 % GST தொகை மட்டுமே மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. 18.07.2022–ற்கு பிறகு செய்த பணிகளுக்கு கூடுதலாக வழங்க வேண்டிய 6 % GST தொகையினை வழங்க தமிழ்நாடு அரசாணை மற்றும் சுற்றறிக்கை கடித எண். 31225/Finance (RES-I/2022/DT 27.09.2022)-

இன்படி கூடுதலாக ஆகும் செலவினத்திற்கு அவற்றிற்கான திட்ட நிதியிலிருந்து கூடுதல் GST தொகையினை வழங்கலாம் அல்லது பொது நிதியிலிருந்து வழங்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க மேற்கண்ட திட்டங்களின்கீழ் கூடுதலாக பிடித்தம் செய்யப்பட்ட தொகையினை திட்ட நிதியில் மீதம் இருந்தால் வழங்க அல்லது பொது நிதியிலிருந்து ஒப்பந்ததாரருக்கு வழங்கிட மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**கீழ்கண்டவாறு திட்டம் மற்றும் தொகை விவரங்கள்**

| Sl.No. | Name of The scheme | Additional GST | Excess amount to be paid from ULB Fund |
|---|---|---|---|
| 1 | TNSUDP 2020-21 | | |
| | Thiru R.Periyasamy | 20293.00 | |
| | Thiru R.Prakasam | 824682.14 | |
| 2 | TURIP 2021-22 | | |
| | Thiru R.Periyasamy | 1644690.44 | 366089 |
| | Thiru R.Prakasam | 947209.89 | 489947 |
| | Total Excess GST Rs. | 3436875.47 | |
| | Amount with in Estimate | 2580839.47 | |
| | Excess amount above Estimate | **856036** | **856036** |

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) கூடுதலாக பிடித்தம் செய்யப்பட்ட தொகையினை திட்ட நிதியில் மீதம் இருந்தால் வழங்க அல்லது பொது நிதியிலிருந்து ஒப்பந்ததாரருக்கு வழங்கிட மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**(2725/24/இ1)**

**தீர்மானம் எண். 638**

அனுமதிக்கப்பட்டது.

**( 3 )** இராசிபுரம் நகராட்சி வார்டு எண். **15**–இல் சி.பி கண்ணையா தெருவில் உள்ள சமுதாய கழிப்பிடம் **40** ஆண்டுகள் பழமையானது மற்றும் மிகவும் சேதமடைந்த நிலையில் உள்ளது. இக்கழிப்பிடத்தின் மேற்கூரை மிகவும் மோசமான நிலையில் பயன்படுத்தாத இயலாத நிலையில் உள்ளது. எனவே இக்கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோர மன்ற அனுமதி தேவைப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் அங்கீகரிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத் தொகை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(2729/24/இ1)**

**தீர்மானம் எண். 639**

அங்கீகரிக்கப்பட்டது.

**( 4 )** இராசிபுரம் நகராட்சி வார்டு எண். **27**–இல் கோனேரிப்பட்டி தெருவிலுள்ள பள்ளியில் உள்ள அங்கன்வாடி **40** ஆண்டுகளுக்கு மேலான மிகவும் சேதமடைந்த நிலையில்

உள்ளது. இதனை நேராய்வு செய்ததில் கட்டிடம் மிகவும் மோசமான நிலையில் பயன்படுத்தாத இயலாத நிலையில் உள்ளதால் இக்கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோர மன்ற அனுமதி தேவைப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் அங்கீகரிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத் தொகை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(2730/24/இ1)**

**தீர்மானம் எண். 640**

அங்கீகரிக்கப்பட்டது.

**( 5 )** இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். **25** கோனேரிப்பட்டி பகுதியிலுள்ள கழிப்பிடத்தில் தண்ணீர் வசதிக்கான பைப் லைன் வசதி செய்தல் மின்சார வசதி செய்தல் மற்றும் வர்ணம் செய்தல் ஆகிய பணிகளை செய்தல் **(0360/24/இ2)** பணிக்கு நகர் மன்றத் தீர்மான எண். **529** நாள் **24.01.2024**-இல் அனுமதி வழங்கியுள்ளதன் பேரில் ரூ. **2,50,000/-** என்ற மதிப்பீட்டிற்கு **19.08.2024**-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1 | M/S ஹரி கன்ஸ்ட்க்ஷன், ஒப்பந்ததாரர், இராசிபுரம் | -0.20% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/S முருகன் கன்ஸ்ட்க்ஷன், ஒப்பந்ததாரர், இராசிபுரம் | 1.62% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி பணிக்கு மதிப்பீட்டைவிடக் குறைவான -0.20% ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S. ஹரி கன்ஸ்ட்க்ஷன், ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(0360/24/இ1)**

**தீர்மானம் எண். 641**

அங்கீகரிக்கப்பட்டது.

**( 6)** இராசிபுரம் நகராட்சி ஆண்டுக் கணக்குகள் **2023**-24 ஆண்டிற்கான பொது நிதி, குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதி கணக்குகள் இணையதளத்தில் தயார் செய்து வழங்க திரு ஜே. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு உத்தேச செலவினத் தொகை ரூ. **70000**/-ஐ வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம். **(1353/24/பி3)**

**தீர்மானம் எண். 642**

அனுமதிக்கப்பட்டது.

ஒம்/– முனைவர் இரா. கவிதா சங்கர்,
நகர் மன்றத் தலைவர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்
இராசிபுரம் நகராட்சி

<u>இராசிபுரம் நகர் மன்றத் தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் பொருள்</u>

(1) அறிஞர் அறிஞர்களுக்கெல்லாம் அறிஞர் அறிஞரேறு பேரறிஞர் அண்ணா அவர்களின் 116–ஆவது பிறந்த தினம். ஆயிரங் காலத்துப் பயிராம் ‘‘தி.மு.க.‘‘ என்னும் மாபெரும் மக்கள் எழுச்சி இயக்கத்தின் மூலவர், சேலம் நீதிக் கட்சி மாநாட்டில், தனது தீர்மானத்தின் மூலம், ‘‘திராவிடர் கழகம்‘‘ முகிழ்த்தெழு விதை நட்ட வித்தகர். தமிழ்நாடு என்று பெயர் சூட்டியதன் மூலம் தாய்க்குப் பெயர் தந்த தலைமகன் ஆனவர் அண்ணா! அண்ணா வழியில் அயராது உழைத்திடவும் ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்திடவும் இன்றைய இளைஞர்கள் அண்ணா தோற்றுவித்த இந்த இயக்கத்தில் இணையும் ஒவ்வொருநாளும், அண்ணா பிறந்த நாளே! அன்னாரது பிறந்த தினத்தை இராசை நகர்மன்றம் கொண்டாடி மகிழ்கின்றது.

(2) திராவிட இயக்க நாயகர் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞரணி செயலாளராக பணியாற்றி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையுடன், திட்டமிடல் மற்றும் வளர்ச்சித் துறையும் கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது. 29.09.2024–ஆம் தேதியன்று தமிழ்நாடு துணை முதலமைச்சராக பொறுப்பேற்றிருக்கும் அவரது செயல்பாடுகள் கழகத்தின் வளர்ச்சிக்கும், ஆட்சித் திறன் மூலமாக தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் அமையும் என்ற உயரிய நோக்கத்திற்கு, இராசை நகர் மன்றம் இளம் தலைவருக்கு வாழ்த்துக்களையும், பாராட்டுதலையும் கூறி மகிழ்கின்றது.